# History of Chulipuram's Parralai Murugamurthy

## Temple and The Significance of **8th Day Annual Festival Celebrated Over 300 Years**





Originally written in Tamil by Sivalogappillai Setukavalappallai in 1958
English version revised by Logan Nathan (Murugesu Sivalogannathan) in May 2025

# சுழிபுரம் பறாளை முருகமூர்த்தி கோயில் வரலாறும் 300 ஆண்டுகளுக்கு மேலாகக் கொண்டாடப்படும் எட்டாவது நாள் வருடாந்த விழாவின் முக்கியத்துவமும்

**1958 இல் சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளையினால் தமிழில் முதலில் எழுதப்பட்டது**



**மே 2024 இல் லோகன் நாதனால் (முருகேசு சிவலோகநாதன்) ஆங்கிலப் பதிப்புத் திருத்தப்பட்டது**



**2010 முதல் 8வது நாள் ஆண்டு விழாவின் தற்போதைய அனுசரணையாளர்**

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

# உள்ளடக்கம்


01. சுழிபுரம் திருப்பதிப் பின்னணி

02. சுழிபுரத்தின் அருமையான மரபு

03. சுழிபுரத்தின் வரலாற்று வகி பாகங்களும்,
சமூகப் பங்களிப்பும்

04. இவ்விரு திருத்தலங்களும் மெய்யன்பர்கள்
பக்திசிரத்தையோடு பாடிய பாக்கள்

05. விநாயக மூர்த்தி கோவில் மற்றும் அதன் வரலாறு

06. பறாளாயின் எட்டாம் நாள் வருடாந்தத் திருவிழாவின் வரலாறு

07. முருகமூர்த்தி கோவில்

08. ஆவது ஆண்டு விழாவை நடத்தும் முறைகள்

09. மரபின் தொடர்ச்சி

10. எட்டாம் நாள் ஆண்டு விழாவின் குடும்ப வரலாறு
பறாளை ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலயம்

11. முடிவுரை



திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

# சுழிபுரம் திருப்பதிப் பின்னணி

இந்தியாவின் தென் திசையில் இலங்கை என்னும் ஓர் தீவுண்டு .இத் தீவை ஈழ நாடென்றும், ஈழ மண்டலம் என்றும், இலங்கையென்றும், இலங்கைத் தீவென்றும் அழைப்பதுண்டு. இத்தீவு உருவத்தில் மாங்கனி போன்றது.




சுழிபுரத்தின் அருமையான மரபு

சோழ நாட்டைச் சேர்ந்தது. இத்தீவின் வட பகுதியை ஓர் யாழ்வல்லவன் (யாழ்ப்பாணன்) சோழ இராசனிடம் பரிசாகப் பெற்று அதில் குடியேறி வாழ்ந்தமையினால் அதற்கு “யாழ்ப்பாணம்” எனப்பெயர் வழங்கி வருகிறது. இவ் யாழ்ப்பாணம் மாங்கனி வடிவானது. அதன் சொண்டில் யாழ்ப்பாணமும், அம் மாங்கனியின் சொண்டுக் கூரில் சுழிபுரமும் அமைந்துள்ளன.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் 27 மைல் அகலங்கொண்ட கடல்பரப்பைப் பாக்குநீரிணை எனக் குறிப்பிடுகின்றனர். இப்பாக்கு நீரிணைக் கடலின் வடகோடியிலும், தென்கோடியிலும் ஸ்ரீ இராமபிரான் அடிச்சுவடுகள் உண்டென்பர். வடகோடி வேதாரண்யம் கோடிக்கரை (தீர்த்தம் ஸ்நான விசேடம் ). தென்கோடி சுழிபுரம் திருவடிநிலை ( தீர்த்தம் ஸ்நான விசேடம் ). பல வருடங்களுக்கு முன் ஸ்ரீ மணவாளக் குருக்கள் அவர்கள் குடத்தைத் தெப்பமாகப் பாவித்து வேதாரண்யம் கோடிக்கரையில் இருந்து சுழிபுரம் திருவடி நிலையில் வந்திறங்கி சுழிபுரத்தில் உள்ள விநாயகமூர்த்தி ஆலயத்தை சேர்ந்தார் என்று முதியோர் சொல்வார்கள் (அது உண்மைச் சம்பவம்). 1956 ஆம் ஆண்டு திரு.நவரத்தினசாமி என்னும் நீச்சல் வீரன் அதனை நீந்திக் கடந்தார் என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் நிரம்பிய தொடர்பு இருந்திருக்கிறது. அது இன்றும் உண்டு. திரேதாயுகத்தில் ஸ்ரீ இராமபிரான் இராவண சம்மாரம் செய்யும் பொருட்டு,சுழிபுரத்தில் உள்ளதும் பிற்காலம் திருவடி நிலை யென்னும் காரணப் பெயரால் அழைக்கப் பெறுவதுமாகிய ஸ்தலத்தில் இறங்கித் தன் அடிச்சுவடு பதித்த இடம் தீர்த்த விசேடம் என்பதை அறிந்து சோழ குமாரத்திகள் எழுவர் திரவியத்தோடும், பரிவாரத்தோடும் திருவடி நிலைக்கு அடுத்ததாயுள்ள சம்பில் துறையில் வந்திறங்கி அருகிலுள்ள திருவடிநிலைச் சமுத்திரத்தில் தீர்த்தமாடி மூலக்கருத்துணரப் பெற்றவர்களாய் (சம்பு – சிவன், இல் – ஆலயம்) அதிலோர் சிவாலயமெழுப்பிச் சமீபத்தி லுள்ள “மழுவை” என்னும் இடத்திலே தாங்கள் வசிப்பதற்காக மாடமாளிகை களைக் கட்டி வசித்தனர். பின்னர் சற்றுச் சமீபத்தில் உள்ள மருத நிலங்களாற் சூழப்பெற்றதும் நீர்வளம் பொருந்தியதாய் உள்ள பறாளையில் தாங்களும் தங்கள் பரிவாரங்களும் ஸ்நானம் செய்வதற்கு ஏழு கூபங்கள் தோண்டினார்கள் என்றும் கர்ண பாரம்பரியமுண்டு. தற்காலம் ஏழு கூபங்களும் ஒருங்கு சேர்க்கப் பெற்றுப் பின் தாமரைத் தடாகமாக முருகமூர்த்தி கோவிலின் வட புறத்தில் இரண்டாம் வீதியில் திகழ்வதைக் காணலாம். பக்கத்திலுள்ள அரசும் வேம்பும் பிணைந்து தலவிருட்சமாகக் காட்சி கொடுக்கிறது. இந்த மாபெரும் விருட்சத்தின் கீழ் மேற்கில் திரு.கந்தவனம் சுந்தரம்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கமும், தெற்கில் திரு .கந்தையா அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற வைரவமூர்த்திக்குரிய ஆலயமும், கீழ் திசையில் பலராலும் ஸ்தாபிக்கப் பெற்ற நாகர்ப் பிரதிட்டைகளும் அமைந்திருக் கின்றன. இத்தாமரைத் தடாகத்தின் தென்புறக் கட்டு திரு. தா. பொன்னம்பலம் கந்தையா தம்பதியினராலும் வடகீழ்த்திசைப் படிகள் திரு.க. சுந்தரம்பிள்ளை தம்பதியினராலும் வயிரக்கற் திருப்பணியாகச் செய்திருப்பது குறிப்பிடத் தக்கவை.

## சுழிபுரத்தின் வரலாற்று வகிபாகங்களும் சமூகப் பங்களிப்பும்

மேற்சொல்லிய சோழிய குமாரத்திகள் வசித்தமையால் “சோழியபுரம்” எனப்பெயர் பெற்று, பின் சுழிபுரம் என மரூஉ மொழியாய் வழங்குவதும், சம் பில் சிவாலயம் அவ்விடத்திலிருந்து எடுக்கப் பட்டு, பறாளை விநாயமூர்த்தி, முருகமூர்த்தி ஆலயங்களும், வடகிழக்கில் சிவன்கோவில் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதும் சமீபத்தில் கீழ்த்திசையில் கண்ணகை அம்பாள் கோயிலிருப்ப தையும் காணலாம். அதே சமயம் மழுவையில் சோழிய குமாரத்திகள் வசித்த கட்டடங்கள் அழிந்திருப்பதையும் காணலாம்.

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

இச் சுழிபுரத்தில் ஸ்ரீ விநாய மூர்த்திக்கும் ஸ்ரீ முருகமூர்த்திக்கும் சுழிபுர வேளாளரான திரு. சின்னப்பு பொன்னையா கயிலாயப்பிள்ளை அவர்களால் ஏற்படுத்திய பூந்தோட்டம் தொடர்ந்து திரு. கா. ஆசைப்பிள்ளை அவர்களால் பரிபாலிக்கப் பெற்று தினசரி மூர்த்திகளின் பூசைக்கு நறுமணங்கமளும் புஷ்பங்கள் வழங்கி வரப் பெறுகிறது .

இவ்விரு மூர்த்திகளுக்கும் நாள்தோறும் பாற் காவடி பால் கொடுத்து வருகிறது. இம் மாபெரும் தர்ம காரியம் சுழிபுரம் வேளாண் மரபில் உதித்த தில்லையம்பலம் வைத்தியலிங்க உபாத்தியாயரால் ஸ்தாபிக்கப் பெற்று அதற்குரிய முதலும் கட்டப்பெற்று, அவரது மூத்த சகோதரன் சபாபதிப்பிள்ளை அதற்கு ஈட்டிவரும் பணவுதவி கொண்டு, தில்லையம்பலம் கனகசபை மகன் சுப்பிரமணியத் தொண்டர் காவடி தூக்கித் தினசரி ஊர்கள் தோறும் திரிந்து இரு மூர்த்திகளுக்கும் பால் வழங்கி வருவது அதிகம் மெச்சத்தக்க புண்ணிய காரியம் எனலாம். இப்பேறு திரு.கா.சுப்பிரமணியம் அவர்களுக்கே கிடைத்திருக்கிறது .இத்தர்மத்தைத் தில்லையம்பலம் குடும்பத்திலுள்ள அனைவரும் பரிபாலித்துச் சிவப்பேறு பெறப் பறாளை மூர்த்திகள் கிருபை பாலிக்கவேண்டுகிறோம்.

முருகமூர்த்தி சன்னிதானத்தில் திரு .தம்பையா கனகசபை அவர்கள் தண்ணீர்ப் பந்தல் அமைத்து உற்சவம் நடக்கும் பன்னிரெண்டு நாட்களிலும் சுத்தசலம், ஊறுகாய், மோர்கலந்த தண்ணீரை அடியார்களுக்கு வழங்கி வருதல் போற்றத்தக்கது .இவர் குடும்பத்திலுள்ளவர்கள் இத்திருத்தொண் டாற்றி வர ஸ்ரீ முருகமூர்த்தி கிருபை பாலிக்க வேண்டுகிறோம்.இத்தொண்டர் திரு. த .கனகசபை முதலியார் அவர்கள் மலாயாவில் பல மொழிகளையுங் கற்று முதலியாராகக் கடமையாற்றியவர். தேர்த் திருநாளன்று அறுசுவைச் சித்திரான்னங்களும், அறுவகைப் பழங்களும் படைத்து, அறுவகைப் புஷ்பங் களும் தேடி ஆறு குருக்கள் சேர்த்து சண்முகமூர்த்திக்கு சண்முகார்ச்சனை செய்து வரும் பேறுடைய அன்பன்.

ஆறாயிரம் ரூபாய் பெறுமதியான தங்கக் கிரீடம் ஆறுமுகவள்ளல் அலங்காரமாய் அணியக்கூடிய சுழிபுரம் சைவ வேளாண் மரபு திரு. ஆறுமுகம் சின்னையா அவர்களால் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இக்கொடை வள்ளல் திரு. மு. தம்பிராசா (ஐக்கிய சங்க கந்தோர்), திரு. மு. சின்னையா (நியாயதுரந்தரர்) சே.இரத்தினவேல் (டாக்டர் சுகாதாரப்பகுதி) திரு. செ. இரத்தினசபாதி (பேராசிரியர்) ஆகியோரின்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

பாட்டனார் . வசந்த மண்டபத்துக்குக் கீழ்புறமாக ஒரு தீர்த்தக் கிணறை கோயில் அர்ச்சகர் திரு. சபாரத்தினக் குருக்கள், நடராசக் குருக்கள் தோண்டி யிருக்கிறார் .

**இவ்விரு திருத்தலங்களும் மெய்யன்பர்கள் பக்திரசத்தோடு பாடிய பாக்கள்**

**01. யாழ்ப்பாணம் நல்லூர் சைவ வேளாளர் மரபு**

கவிஞர் – சின்னத்தம்பிப் புலவர்
ஆக்கம் – பள்ளுப் பிரபந்தம்.
அஞ்சலி – ஸ்ரீ விநாயமூர்த்தி பேரில்

**02. சுழிபுரம் வேளாளர் மரபு**

கவிஞர் – திரு .கத்திரத்தம்பி ஆறுமுக உபாத்தியாயர்
ஆக்கம் – நள சக்கரவர்த்தி நாடகம்
காணிக்கை – 1983 ஆம் ஆண்டுத் திருவிழாவின் போது கண் நோயில் இருந்து குணமடைய ஸ்ரீ முருக மூர்த்தியை வேண்டிக் கொண்டார். சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளை மற்றும் பௌத்த நோட்டரி திரு. சுப்பிரமணியம் குலவீரசிங்கம் ஆகியோருடன் இணைந்து சுழிபுரம் செட்டிகள் குறிச்சியில் உள்ள ஆறுமுக வித்தியாசாலை, அவரது உறவினர் நோட்டரி சுப்பிரமணியத்தால் நிறுவப்பட்டது .

03. ஸ்ரீ பராமநாதர் அருணாசலப்புலவர்

தொழில் – சைவ (இந்து) விவசாயம்
படைப்பு – பறாளை ஏசல்
அஞ்சலி – பால்க் காவடியின் அர்ப்பணிப்புள்ள தன்னார்வலர் (உள்ளடக்கம் அலங்கரிக்கப்பட்ட காவடியில் பால் பானையை எடுத்துச் செல்வது மர, மூங்கில் அமைப்பு) திரு. த. சங்கரப்பிள்ளையின் மகன். பறாளை முருகன் ஆலயத்தின் ஆறாம் நாள் வருடாந்த திருவிழா.

04. திரு . என் . வேலுப்பிள்ளை

தொழில் – சுழிபுரம் விவசாயத்தை ஆதரிப்பவர் மரபு
ஆக்கம் – தோத்திர கீர்த்தனைகள்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

பங்களிப்பு – இரண்டு சிலைகளுக்குத் தீர்த்தத் திருவிழாவை நிறுவினார். இது இன்று வரை தொடரும் தொண்டு.

05. ஸ்ரீ சி .சிவப்பிரகாச பண்டிதர்

அமைப்பு – ஸ்ரீ முருக ரத்னத்ரயம்

அஞ்சலி – சண்முகநாதனின் இளைய தந்தை ஏ .சிவகுருநாதன். சிவகுருநாதன் இந்தக் கீர்த்தனையை விநாயகருக்கு வழங்கினார். மூர்த்தி ஒரு திருவாசி, தமிழ் நாட்காட்டியில் ஆடி மாதம்.

தமிழ் நாட்காட்டியில் நான்காவது மாதம் மற்றும் பொதுவாக கிரிகோரியன் நாட்காட்டியில் ஜ•லை நடுப்பகுதிக்கு ஆகஸ்ட் நடுப்பகுதிக்கும் இடையில் வரும் . இந்த மாதம் பல்வேறு வழிபாடு மற்றும் நடத்துவதற்கு ஏற்றதாக கருதப்படுகிறது. தெய்வீகத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட சடங்குகள்.



திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

# விநாயக மூர்த்தி கோவில் மற்றும் அதன் வரலாறு



இக்கோவில் முருகைக் கற்களால் கட்டப் பெற்றிருந்து பின் 1938 ஆம் ஆண்டு சுழிபுரம் வேளாண் பரம்பரை திரு.வைத்தியலிங்கம் பொன்னம்பலம் அவர்களால் வைரக் கற்கள் கொண்டு புதிதாக வைரமாகக் கட்டப் பெற்றது. அவர் மலாயாவில் சேவையர் உத்தியோகத்தில் இருந்து உபகாரச் சம்பளத்துடன் யாழ்ப்பாணம் வந்த பின் இலங்கையில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக இருந்த இரண்டாம் முறையும் இலங்கையின் (பென்ஷன்) உபகாரச் சம்பளம் எடுத்தவர். பின் பத்து வருஷம் சங்கானைக் கிராம நீதவானாக இருந்தும், பின் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வைத்திய சாலையில் கௌரவ முகாமையளராகவும் கடமையாற்றி வரும் பொழுது இல் வாழ்வைத் துறந்து சிவபதம் எய்தினார். இவர் சங்கானைக் கிராம நீதவானாக இருந்தபொழுது இக்கோவில்களுக்கு சாமி தரிசனஞ் செய்யப் போகும் தொண்டர்கள் வெள்ளத்திலும் சேற்றிலும் வயல்களிலும் நடந்து போகும் சிரமத்தை உணர்ந்து, இப்பெரியார் சுழிபுரத்தில் உள்ள கிராம வயற்ச் சொந்தக்காரரைப் பரிந்து கேட்டு தலைசாட்டியிலுருந்து விநாயகர் ஆலயம் வரையும் ரோட்டுப் போட்டிருக்கிறார். சுழிபுர மலாயா யூனியன் பண உதவி செய்திருக்கிறது. செட்டிப்பிள்ளை திக்கிலும் இன்னும் கிழக்கேயுள்ள சனங்கள் சுவாமி தரிசனைக்கு வரக்கூடியதாய் கண்ணகை அம்மாள் கோவிலடியிலுருந்து வயல்களுக்கூடாக கோவில்வரையும் ஒரு பெரிய நடை

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

வரம்பு சரிகட்டியிருக்கிறார். ஊர்காவற்றுறையிலுருந்து காங்கேசன்துறைக்கு கடற்கரையோரம் போகும் ரோட்டில் சுழிபுர திருவடிநிலையில் (சங்கரப்பிள்ளை இராமனாதர் வீதிவிடங்கர் ஆகியோர் கட்டிய) தீர்த்தக்கரை மடத்துக்குத் தென்புறமாக இருக்கும் பிராமணர், சைவர், வேளாளர் ஆகியோரின் மயானத்துக்கு போகும் வீதியும் திறந்து விட்டிருக்கிறார்.

திருவடிநிலைக் கடலில் சுவாமிகள் தீர்த்தங் கொடுக்குமிடத்தில், சுவாமிகளும் பக்தர்களும் தீர்த்தமாடுவதற்கு வசதியாக திருவடிநிலைக் கடலில் தீர்த்தமாடும் இடங்களின் கற்களை எடுத்துச் சுத்தம் செய்வித்திருக்கிறார். இப்பெரியார் விக்டோரியாக் கல்லூரி ஸ்தாபகர் கனகரத்தின முதலியார் நிற் சிங்கம் மகன் மேற்படி கல்லூரி ஆசிரியர் கனகரத்தினம், வி. தில்லையம்பலம், வி.ஐயேந்திரம்.சரவணமுத்து நியாயதுரந்தர் கந்தையா மகன் தம்பிராசா ஆசிரியர், தொல்புரம் சைவவேளான் மரபிலுள்ள (ஆழ்வார் உடையார் வழித்தோன்றல்) அம்பலவாணர் வரதராசன் ஆகியோரின் தாய்மாருடன் பிறந்த மாமனார். புண்ணியசீலர், சுவாமிகளைக் கும்பிடுகிறவர்கள், தீர்த்தமாடு கிறவர்கள், ஈமக்கிரிகைகள் செய்பவர்கள் இப்பெரியாரை நினைக்கக் கூடியதாயிருக்கிறது .

இவ் விநாயகர் ஆலயத்தில் பஞ்சமுக விநாயகமூர்த்தி இருக்கும் கற்பக்கிரக மண்டபம் சிவலோகர் சேதுகாவலப்பிள்ளையின் பண உதவி கொண்டு கட்டப்பெற்றது.

பறாளைப்பதியில் கோயில் கொண்டருளியிருக்கும் மூர்த்திகள் பவனிவரும் தேர் (இரதம்) அநேக வருஷங்களுக்கு முன் இந்தியாவிலிருந்த சகலகலை வல்லுனச் சிற்பாசிரியாரால் சாஸ்திரமுறைப்படி அழகுபெற அமைக்கப்பெற்றது. அதிசயிக்கக் கூடிய சிற்பசித்திரங்கள் ஆசாரியின் திறமையைக் காட்டுகிறது. அதனைத் தற்பொழுது சுழிபுரம் மலாயா சங்கம் பழுது பார்க்கிற பணிகளைச் செய்கிறது.

இத்தேரில் விநாயகமூர்த்தி பஞ்சமுகங்களுடனும், ஸ்ரீ முருகமூர்த்தி கருணைகூர் ஆறுமுகங்களுடனும் ஆண்டுகள் தோறும் முறையே ஆனி உத்தரத்தன்றும், வைகாசி விசாகத்தன்றும் பவனிவந்து அருள் புரிவது வழக்கம். பக்தியுடன் தரிசிப்பவர்களுக்கு தீராவினைகள் தீரும். இதுபற்றியே தோத்திர கீர்த்தனை பாடிய ஆறுமுக உபாத்தியாயர் அவர்கள் “தேரிலேழுந்து செவ்வேல் வரும் பவனியைக் கண்டால் தீராவினைகள் தீருமே.” என்றார். தேர்த் திருநாட்களில் சுவாமிகள் தேரிலிருந்து இறங்கியவுடன் மண்டபப்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

படியும் முறையே பஞ்சமுக சண்முக அர்ச்சனைகளும் (அப்பா) உடையார் சுப்பிரமணியம் உடையார் வழித்தோன்றல்கள் செவ்வனே செய்து வருகிறார்கள். இம்மூர்த்திகள் தேரிலிருந்து வரும்பொழுது பாத தீர்த்தம் கொடுப்பதற்கு அலங்கார மண்டபங்கள் அமைத்துச் சித்திரான்னம், பழ வர்க்கங்கள் படைத்து மண்டகப்படி போட்டு பஞ்சமுக அர்ச்சனையும் சண்முக அர்ச்சனையும் தோத்திரக் கீர்த்தனைகள் பாடியும் இறையருள் பெருக்கும் பணியினை வேலுப்பிள்ளையின் மகன் குமரகுருவும் சகோதரிகளும் செய்து வருகிறார்கள்.



மூலஸ்தானத்தின் ஸ்ரீ முருகப்பெருமான் இருக்கும் பாவனையாக இரு மருங்கிலும் வள்ளிநாயகி, தெய்வநாயகி சமேதராய் கிழக்கு முகமாகவும் வீற்றியிருந்து அருள் புரிகிறார். ஸ்ரீ ஆறுமுகவள்ளல் கருணைகூர் முகங் களுடன் வேலாயுதம் பிடித்துக்கொண்டு நிற்கும் பாவனையாகத் தெற்கு முகமாக அடியார்க்கு அருள் புரியும் காட்சி ஆனந்தத்தைக் கொடுக்கிறது.

இப் பறாளையில் முருகமூர்த்தி ஆலயம் இன்றைக்கு 300 வருஷ காலங்களுக்கு முன் சைவ வேளாண் மரபிலுதித்த திரு. முத்தம்பலவாணர் முதலியார் பாரியரால் ஸ்தாபிக்கப்பட்டது.

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

## பறாளாயின் 8 ஆம் நாள் வருடாந்தத் திருவிழாவின் வரலாறு

# முருகமூர்த்தி கோவில்



அக்காலம் தொடங்கி எட்டாம் திருநாளும் சுழிபுர நகர் சைவ பரம்பரை சேதுகாவல முதலியார் மகன் விசுவநாத முதலியார் ,அவர் மகன் சிவலோக முதலியார் , காலத்தில் தனியே (பங்குகள் இல்லாமல் நடத்தியும் அவருக்கு பின் சிவலோக முதலியார் மக வீரப்பத்திரப்பிள்ளையும், அவருக்கு பின் அவர் புத்திரர்கள் சிவலோகபிள்ளை சிற்றம்பலம் (தொம்பர்), கதிரேசன் (இத்தினியர்) செவ்வனை நடத்தி வருங்காலத்தில் முருகப்பெருமான் கதிரேசருக்குச் சொர்ப்பனத்தில் தோன்றி தான் வள்ளிநாயகி அம்மனை திருமணம் செய்த ஐதீகத்தை விழாவில் காண்பிக்கும்படி உத்தரவு கொடுத்தார். அதேகாலத்தில் சுழிபுரம் பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் விஸ்வநாதக் குருக்களும் நாடக வித்துவான் பொன்னாலைக் கணபதிப் பிள்ளைக்கும் (ஆண்டிக்கு நடித்தவர் ) ஸ்ரீ வள்ளிநாயகி திருமண விழாவை சுழிபுரம் 8ஆம் விழாவின் உபயகாரருடன் சேர்ந்து நடத்தும்படியும் சொப்பனத்தில் அருளினார். பின் 8 ஆம் விழா உபயகாரன் வீ .கதிரேசன் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் நாடகவித்துவான் திரு. கணபதிப்பிள்ளை (பொன்னாலை கிருஷ்ணனின் தந்தை) ஆகிய மூவரும் கலந்து முருகப்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

பெருமான் தங்களுக்குச் சொன்ன வள்ளிநாயகி திருக்கல்யாணத்தை 8 ஆம் விழாவிலன்று 1915 ஆம் ஆண்டளவில் தொடங்கினார்கள். இவ் விழாவிலன்று இக்கோவில் வடக்கு வீதியில் தினைப்புனம்போல் தினைக்கொல்லை உண்டுபண்ணி நடிப்பதற்கு, தென்னை, வாழை, கமுகு, புஷ்பச்சரங்கள் முதலியவற்றால் அலங்கரித்து, வெகுவிமர்சையாக நடத்தி வந்தார்கள். இத் தினைப்புன விழாவில் பொன்னாலை பேரம்பலம் கணபதிப்பிள்ளை, சுழிபுரம் தி. அம்பலவாணர் (அப்பச்சி அப்பாப்பிள்ளை) வே. சுப்பிரமணியம் ஆசைப்பிள்ளை ஆகியோரும், இன்னும் பல நாடக வித்துவான்களும் பங்கு பற்றி நிரம்ப விமர்சையாக ஸ்ரீ வள்ளிநாயகி நாடகத்தை நடாத்தி வரும் காலத்தில், யாழ்ப்பாண நகரிலுள்ள சனங்களெல்லாம் வந்து பார்த்தார்கள். பின் ஒரு காலம் 1925 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்ரீ வள்ளிநாயகி திருமணம். நாடக முறையிலும் அபிநயத்தும் நடைபெற்றது. 1933 இல் வலங்கைமான் சங்கீத வீத்துவான் ஸ்ரீமான் கோ. இராமையா பாகவதர் கதாப்பிரசாங்கமும் நாடகசபையார் நாடகமும் நடைபெற்றது.

வருடம் தோறும் நற்கியாதி பெற்ற சங்கீத வித்துவான்களால் திருமண சரிதை பக்திமார்க்கமாக நடத்திக் காண்பிக்கப்பட்டது. 1940 ஆம் ஆண்டு ஸ்ரீ சிவப்பிரகாச யோகிஸ்வரர் அவர்களும் உபந்நியாசம் செய்து இருக்கிறார்கள். பலமுறை முத்தமிழ்மணி பிரம்மஸ்ரீ C. S. S. மணி ஐயர், இராமநாதன் கல்லூரி குமாரசுவாமிப்புலவர் அவர்களும், முருகேசு முதலியார் அவர்களும் கதாப்பிரசாங்கம் செய்து இருக்கிறார்கள். 1939 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதிதாக வைரவேலையாக செய்த பெலப்பான சகடையும் மயில்வாகனமும், மயில்வாகனத்துக்குரிய மேல்சோடினையும் தீவட்டிகள், அன்ன பாவாடைபெட்டிகள், தாம்பாளங்களும் இன்னும் பல உபகரணங்களும் வைப்பதற்காக ஒரு பாதுகாப்புக் கொட்டகையும் இக் கோவில் வீதியில் அமைக்கப்பெற்று இருக்கிறது.


Sivalogappillai Setukavalappallai Sponsor from 1936 to 1966


Chellapah Murugesu Sponsor from 1966 to 1982


Saraswathy Devi Murugesu Sponsor from 1982 to 2010


Murugesu Sivaloganathan (Logan Nathan) Current Sponsor since 2010

தற்காலம் சிவலோகப்பிள்ளை, சேதுகாவலபிள்ளை எட்டாம் திருவிழாவை நடத்தி வருகிறார். அவர் தனக்குப்பின் தன் பாரியார்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

முத்தம்மாளும் (முத்த சகோதரி மகன்) க. தம்பிப்பிள்ளையும் இளைய சகோதரி மகன் மு. செல்லப்பா முருகேசுவும் சிவலோக குடும்பத்திலுள்ளவர் களும் அவர்களுக்குப் பின் இளவரசு (அபிமான பௌத்திரர்கள்) செல்லப்பா முருகேசு மகன் சிவலோகநாதனும், சுப்பையா மகன் உதயசோதியும் (குலவீரசிங்கம் மகனின் குழந்தை)அவர்களுக்குப் பின் அவர்களால் நியமனம் பெறுவோரும் செவ்வனே இவ்வெட்டாம் திருவிழாவை நடத்திவர வேண்டு மென்றும் உறுதி பிறந்திருக்கிறது. (உறுதி – சாதனம் )இவ்வெட்டாம் திருவிழா நடத்துவதற்கு முதல், சாத்துப்படிக்காக சுழிபுரம் வீரபத்திர கதிரேசரும், சுப்பிரமணியர் நாகமுத்துவும் சிறுதொகை கட்டியிருக்கிறார்கள். சப்பறத்துக்காக சி. சேதுகாவலபிள்ளை முதல் கட்டியிருக்கிறார். மேலும் 1926 ஆம் ஆண்டு சிவபதமடைந்த சிறிய தந்தை கதிரேசர் கேட்டுக்கொண்ட படி சுழிபுரம் வருந்தோலை என்னும் காணியில் வைரக் கற்களால் கட்டப்பட்ட கிணறு உட்பட நெல் வயல் பரப்பு பத்தும் (நாச்சிமார் கோவில் தெற்கு பக்கம்) பணம் இரண்டாயிரம் ரூபாய் முதலும் கட்டியிருக்கிறார்.

1964 ஆம் ஆண்டு முதல் சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளைக்கு பிறகு செல்லப்பா முருகேசு உண்மையில் தனது பொறுப்புகளை மேற் கொண்டார். இருப்பினும் 1982 இல் செல்லப்பா முருகேசுவின் மறைவுடன், துணிச்சலுடன் முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு அவரது மனைவி சரஸ்வதி தேவி முருகேசு மீது விழுகிறது.ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக திருவிழாவை ஒழுங்கைமைப்பதில் உள்ள சிக்கல்களை மேவி அவர் கருணை, அர்ப்பணிப்பு மற்றும் சமூகத்தின் மீதான கருணையால் செவ்வனை செய்தார்.


2010இல் அவர் மறைந்த பிறகு, லோகன்நாதன் (முருகேசு சிவலோகநாதன்) பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றினார். மிகுந்த மரியாதையுடனும், அர்ப்பணிப்புடனும் அவர் தனது முன்னோர்களால் வழங்கப்பட்ட பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து நிலைநிறுத்துகிறார். மேலும் இந்தத் திருவிழாவின் முக்கியத்துவத்தை எதிர்காலச் சந்ததியின ருக்கும் கடந்த வேண்டும் என்பதை உறுதி செய்கிறார் .

திரு அலங்காரங்களுக்காகச் சிறிய நிதியொன்று ஒதுக்கப்பட்டு, லோகநாதன் (முருகேசு சிவலோகநாதன்) 2023 ஆம் ஆண்டு புனரமைத்த சப்பரம், மயில்வாகனம் உள்ளிட்ட புனரைமைப்புகளுடன் ஆலயத்தைப் பராமரித்துத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025



சப்பரம் ஏப்ரல் 1939 இல் கட்டப்பட்டது மற்றும் மே மாதத்தில் புதிதாக புதுப்பிக்கப்பட்டது 2023 புதுப்பிக்கப்பட்டது



ஏப்ரல் 1939 இல் கட்டப்பட்ட மயில்வாகனம் மே 2024 இல் மீண்டும் வர்ணம் பூசப்பட்டது

## 8ஆம் நாள் வருடாந்தத் திருவிழாவை நடத்தும் முறைகள்



திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

காலை ஆறு மணி தொடக்கம் மண்டபங்கள் அலங்காரம் காலை எட்டு மணி தொடக்கம் சகல சங்காபிஷேகத்திற்குரிய சங்குகள், கும்பங்கள் அமைத்தல். காலை பத்து மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகும். முறையான அபிஷேகத்துடன் விசேஷமாகத் திருநீற்று அபிஷேகம், சந்தன அபிஷேகம்,அன்னாபிஷேகம், முதலியன நடந்தவுடன் சக்கரை அமுது படைத்துத் தினை மாவிளக்குகளும் ஏற்றி பூஜை நடைபெறும்.

பகல் பன்னிரண்டு மணியளவில் வசந்த மண்டபத்தில் மேளக்கச்சேரி யுடன் சமயப் பிரசங்கம்,தேவாரம்,திருவாசகம், திருப்புகழ், தோத்திரக் கீர்த்தனைகள் கூட்டாகவும், திரள் திரளாகவும், வரிசை வரிசையாகவும் நடைபெறும். அங்கு போட்டியும் நடைபெறும்.பின் ஸ்ரீ முருகப்பெருமான் அலங்கரிக்கப் பெற்ற பச்சை மயில் மீதேறி உள்வீதி மற்றும் புற வீதிகளில் பவனி வருவார்.வரும்பொழுது பக்தர்கள் பூமாரி பொழிவார்கள். சுவாமிக்கு பின்னால் ஏராளமான ஆண், பெண், பாலர்கள் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டு முறையே அங்கபிரதட்சணம் கும்பிடுபோடுதல் செய்வார்கள், மறையோர் பக்தர்கள் வேதபாராயண, தேவார, திருவாசக,திருப்புகழ் கோஷ்டிகளுடன் வீதிகளைச் சுற்றி வந்து வசந்த மண்டபத்திற்கு வந்தவுடன் தீபாராதனை ஆனதும், திருநீறு, சந்தனம், பஞ்சாமிர்தம் ,சித்ரான்னங்கள் வழங்குவது வழக்கம்.

மாலை ஏழு மணியளவில் திரு விளக்குகள் ஏற்றி பூஜை ஆனவுடன் சுவாமியை உட்பிரகாரத்தில் வீதி வலமாக எடுத்து வந்து, மின்சார வெளிச்சங்கள் அமைக்கப்பெற்ற முத்துச் சப்பரத்தில் ஏற்றி வெளிவீதி வலம் வந்தவுடன் சப்பரம் சந்நிதானத்தில் நிற்க அலங்கரிக்கப்பெற்ற தினைப்புன மண்டபத்தில் பக்தர்கள் படைசூழ பிரபல சங்கீத வித்துவான்களால் இரவு பத்து மணியளவில் கதாப்பிரசங்கம் பக்க வாத்தியங்களின் பக்திரசத்துடன் வள்ளி நாயகி திருமணம் என்னும் திவ்ய சரித்திரத்தை கேட்போர் களிக்கும்படி மூன்று மணிநேரம் செய்யப்படும்.சுவாமி சப்பரத்திலிருந்து இறங்கி பக்தர்கள் ஊஞ்சல் பாட்டுப் பாடவும் சங்குநாதம் மேளவாத்தியம் முழங்கவும் இருப்பிடம் சேருவார்.

தேர்த்திருநாளில் மறுநாள் விநாயகமூர்த்தி ஆனிமகத்திற்கும், முருக மூர்த்தி வைகாசி விசாகத்திற்கும் இன்னும் சந்திர, சூரிய கிரகணங்கள், மாசி மகம், சிவராத்திரி, தைப்பூசம் முதலிய புண்ணிய காலங்களிலும் திருவடிநிலைத் தீர்த்தம் கொடுக்கப் போவதுமுண்டு. திருவடிநிலைத் தீர்த்தக்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

கரையில் சுழிபுர சைவவேளாளர் வீதிவிடங்கர், சங்கரப்பிள்ளை வீதிவிடங்கர் (மாப்பிள்ளை), இராமநாதர் (சின்னட்டி) என்பவர்கள் பெரியமடமும் வைரவ மூர்த்தி ஆலயமும் அமைத்திருக் கிறார்கள். இத்திரு மடத்தில் தீர்த்தோற்சவ தினத்திலன்று மூர்த்திகளுக்கு அபிஷேகமும் பிராமண போஷணமும்,குலகுருமார்களுக்கு மகேஸ்வர பூசையும் வீர சைவர்களுக்கும் மற்றும் விரும்பியோர்க்கும், ஏழைகளுக்கும், அன்னதானமும் செய்து வந்தார்கள். (இது மாபெரும் புண்ணியம்). தற்காலமும் அவர்கள் வழித்தோன்றல்கள் : திரு.இ .குணரத்தினம் கந்தையா சங்கரப்பிள்ளை இராமநாதன் ஆசிரியரும், திரு.வி.இராமலிங்கம் குடும்பத்திலுள்ளவர்கள் மார்க்கண்டு ஆசிரியர் ஆகியோரும் மூதாதைகள் செய்து வந்தது போல இன்னும் திறமாகவும், அன்புடனும் அன்னதானம் செய்துவரப் பறாளை மூர்த்திகள் அனுக்கிரகம் செய்யவேண்டுமென்று பக்திபூர்வமாக வேண்டுகின்றேன்.

இத்தீர்த்தக்கரையில் இம்மடாலயத்திற்கு முன்கரை ஓரமாக ஓர் நன்னீர் ஊற்றிருந்த இடத்தில் திரு.சி.சேதுகாவல பிள்ளை ஓர் தீர்த்தக்கிணறு தோண்டியிருக்கிறார். மடத்திற்குப் பின்னால் ஒரு அபயகிரியை மடம் திரு. குணரத்தினமும் பாரியாரும் அமைத்திருக்கிறார்கள். திரு.வடிநிலைக் கடலோரத்தில் இத்திரு மடத்துக்கு மேற்கே வேளாளர் சுடலையில் சுழிபுரம் முருகேசர் சிற்றம்பலம் அவர்கள் சனங்கள் தங்குவதற்கு ஒரு மடம் கட்டிவைத்திருக்கிறார். திருவடிநிலையில் பொன்னாலை வரதராசப்பெரு மாளுக்கு ஆவணி ரோஹிணியிலும் மார்கழி ஏகாதிசியிலும் தீர்த்தம் கொடுக்கும் மடம் சுழிபுரத்தைச் சேர்ந்த கொழும்பு வியாபாரிகளால் கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் இம்மடத்தில் மேற்சொல்லிய தினங்களில் தீர்த்தச் செலவும் அன்னதானமும் வெகு விமர்சையாகச் செய்து வரு கிறார்கள். இம்மடத்திற்குச் சமீபத்தில் தற்பொழுது அதிபராய் இருக்கும் கனம் ஸ்ரீகாந்தா அவர்களின் பங்களா இருக்கிறது. ரோட்டிற்குக் கீழ்ப்புறத்தில் அரசினர் துணிநெசவுத் தொழிற்சாலையும் கட்டப்பட்டிருக்கிறது. திருவடிநிலை திருமடத்துக்குக் கிழக்கே உள்ள பிரதான வீதி அருகில் சனங்கள் தங்கு வதற்கு ஒரு மடமும் கிணறும் வட்டுக்கோட்டை திரு.சே.வேலுப்பிள்ளை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். திருவடிநிலைக் குக் கிழக்கே கால் மைல் தூரத்தில் புராதன ஐயனார் கோவில் புனரமைக்க வேண்டிய முறையில் இருக்கிறது. இத்தீர்த்தக்கரையில் இம்மடாலயத்திற்கு முன்கரை ஓரமாக ஓர் நன்னீர் ஊற்றிருந்த இடத்தில் திரு.சி.சேதுகாவல

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

பிள்ளை ஓர் தீர்த்தக்கிணறு தோண்டியிருக்கிறார். மடத்திற்குப் பின்னால் ஒரு அபயகிரியை மடம் திரு. குணர்த்தினமும் பாரியாரும் அமைத்திருக்கிறார் கள். திரு.வடிநிலைக் கடலோரத்தில் இத்திரு மடத்துக்கு மேற்கே வேளாளர் சுடலையில் சுழிபுரம் முருகேசர் சிற்றம்பலம் அவர்கள் சனங்கள் தங்குவதற்கு ஒரு மடம் கட்டிவைத்திருக்கிறார். திருவடிநிலையில் பொன்னாலை வரத ராசப்பெரு மாளுக்கு ஆவணி ரோஹிணியிலும் மார்கழி ஏகாதிசியிலும் தீர்த்தம் கொடுக்கும் மடம் சுழிபுரத்தைச் சேர்ந்த கொழும்பு வியாபாரிகளால் கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் இம்மடத்தில் மேற்சொல்லிய தினங்களில் தீர்த்தச் செலவும் அன்னதானமும் வெகு விமர்சையாகச் செய்து வருகிறார் கள். இம்மடத்திற்கு சமீபத்தில் தற்பொழுது அதிபராய் இருக்கும் கனம் ஸ்ரீகாந்தா அவர்களின் பங்களா இருக்கிறது. ரோட்டிற்கு கீழ்ப்புறத்தில் அரசி னர் துணிநெசவு தொழிற்சாலையும் கட்டப்பட்டிருக்கிறது.திருவடிநிலை திரு மடத்துக்குக் கிழக்கே உள்ள பிரதான வீதி அருகில் சனங்கள் தங்கு வதற்கு ஒரு மடமும் கிணறும் வட்டுக்கோட்டை திரு.சே.வேலுப்பிள்ளை அவர்கள் அமைத்திருகிறார்கள். திருவடிநிலைக்குக் கிழக்கே கால் மைல் தூரத்தில் புராதன ஐயனார் கோவில் புனரமைக்க வேண்டிய முறையில் இருக்கிறது.

## மரபின் தொடர்ச்சி

சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளையினால் முதலில் விவரிக்கப்பட்ட எட்டாம் நாள் திருவிழா செல்லப்பா முருகேசு, திருமதி சரஸ்வதிதேவி முருகேசு உள்ளிட்ட தலைமுறையினால் உயிர்ப்புடன் பேணிப் பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த 2024ஆம் ஆண்டு நிலவரப்படி முருகேசு சிவலோகநாதன் (லோகன் நாதன்) இன்னும் விழாவிற்கு நிதியுதவி செய்கிறார். கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் நிலவும் பிரச்சனைகள் காரணமாக ஒன்பது மணி நேர நிகழ்ச்சி நிறுத்தப்பட்டாலும், திருவிழாவின் உற்சாகம் அப்படியே குறையாதிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மூன்றாம் நாள், விநாயக மூர்த்தி ஆனிமகம் மற்றும் முருகமூர்த்தி வைகாசி விசாகம், சந்திர மற்றும் சூரிய கிரகணம், மாசி மகம் மற்றும் சிவராத்திரி போன்ற முக்கிய நிகழ்வுகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. தைப்பூசம் போன்ற சுபநிகழ்ச்சிகளில் திருவடித் திருநாள் தீர்த்தம் பரிபாலனம் செய்யப்படுகிறது.

முக்கிய நபர்களின் வழித்தோன்றல்கள் தொடர்ந்து தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிலைகளுக்கு காணிக்கை செலுத்தி, கோவில்

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

செழிப்பை உறுதி செய்கிறது. பழங்கால கோவில்கள் மற்றும் மடங்களின் புனரமைப்புப் பணிகள் நடந்து வருகின்றன. இது அவர்களின் பாரம்பரியத் தைப் பாதுகாப்பதில் சமூகத்தின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

இந்த ஆண்டு விழாவின் வளமான வரலாறு கீழே உள்ள குடும்ப கிளையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதன் தோற்றம் முதல் தற்போதைய உபாயகாரர் வரை 300 ஆண்டுகளுக்கும் மேலாகப் பரந்துள்ளது.


இது அவர்களின் கிராமத்தில் தலைவர்களாக இருந்த முதலியார் குடும்பத்துடன் தொடங்கியது. அதைத் தொடர்ந்து விவசாயிகளான பிள்ளை குடும்பம். கடந்த மூன்று தலைமுறைகளில்,குடும்ப உறுப்பினர்கள் பல்வேறு தொழில்சார் தொழில்களை மேற்க்கொண்டுள்ளனர்.நவீன வாழ்க்கையில் கலந்து பாரம்பரிய தமிழ் சாதி அடையாளங்களுக்கு அப்பால் நகர்கின்றனர்.

இன்று குடும்ப உறுப்பினர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்தாலும், பெரும்பாலானோர் கோவில் தொடங்கப்பட்டதிலிருந்து 300 ஆண்டுகளுக் கும் மேலாக கொண்டாடப்படும் எட்டாம் நாள் திருவிழாவுக்கு அனுசரணை வழங்கி ஆதரிப்பதில் உறுதியாக உள்ளனர். கடந்த மே 2024ல் நடந்த திருவிழாவில் இந்த அர்ப்பணிப்புத் தெளிவாகத் தெரிந்தது.குடும்ப உறுப்பினர்கள் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் கனடாவில் இருந்து வந்து நேரில் கலந்து கொண்டனர். மற்றவர்கள் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நிகழ்நிலை நேரலை மூலம் இணைந்திருந்தனர்.



திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

**8ஆம் நாள் ஆண்டு விழாவின் குடும்ப வரலாறு**
**பறாளை ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலயம்**




திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

## முடிவுரை

கடந்த நாற்பத்தொன்பது வருடங்களாக வெளிநாட்டில் வசித்த நான், கடந்த எட்டு வருடங்களாக எட்டாம் நாள் திருவிழாவில் கலந்து கொள்வதற்காகவே ஒவ்வொரு வருடமும் எனது கிராமத்துக்கு வருகிறேன். எனது சிறுவயது நினைவுகளில் இருந்து எனது பெரிய மாமாவாகிய சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளை அவர்களின் செயற்திறனாலும், பின்னர் எனது தந்தையார் செல்லப்பா முருகேசு அவர்களின் நடவடிக்கை களைப் பார்த்ததில் இருந்தும் எனக்குத் திருவிழாவின் மீது பற்று ஏற்ப்பட்டது. மிக முக்கியமாக, என் அம்மா சரஸ்வதிதேவி முருகேசு அவர்கள் எப்போதும் கோயில் திருப்பணிகளோடு இணைந்திருக்க என்னை ஊக்குவித்தார். நலன் விரும்பிகள், நெருங்கிய உறவினர்கள் மற்றும் என் நண்பர்கள் உதவியுடன் வருடாந்தம் வரும் எட்டாவது நாள் திருவிழாவை ஏற்பாடு செய்வதில் உள்ள முன்னேற்றம் மற்றும் சவால்கள் குறித்து எனக்குத் தெரியப்படுத்தினர்.

கடந்த எட்டு ஆண்டுகளாக, நெருங்கிய உறவினர்கள், கோவில் தலைவர்கள், அர்ச்சகர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், கோவில் கமிட்டி உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டர்கள் சங்கம் (தமிழில் தொண்டர் சபை) நாதஸ்வரம் இசைக் குழுக்கள், நாட்டுப்புற நடனக் கலை ஞர்கள் மற்றும் தளபாட ஆதரவாளர்களுடன் மீண்டும் இணைத்துள்ளேன். என்னை ஈடுபடுத்துவதில் அவர்களின் ஊக்கம் முக்கியமானது.

1. என் மனைவி நிம்மி நாதன் : அவர் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து கிறிஸ்தவ மதத்தைக் கடைப் பிடித்தாலும் , கடந்த எட்டு ஆண்டுகளாக எட்டாம் நாள் திருவிழா திறம்பட நடக்கவும், அதன் எதிர்கால நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும் பலமான ஆதரவாளராக இருந்து வருகிறார் .

2. சிவகலை ரத்னகோபால் : அவர் என் உறவினர் மற்றும் சிவசிதம்பரத்தின் மகள். போக்குவரத்தைத் திறமையாகக் கையாள்கிறார்.

3. ரத்தினகோபால், சிவகலையின் கணவர். திருவிழா தொடர்பான அனைத்துச் செயல்களும் சீராக இயங்குவதை அவர் உறுதி செய்கிறார்.

4. சிவகுமாரன் (சிவா) சிவசிதம்பரம் : அவர் சிவசிதம்பரத்தின் மகன் அவர் தனது குடும்பத்தினருடன் நிகழ்வை அமைதியாக ஆதரிக்கிறார்.

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

5. தங்கமும் பூமாவும் : சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளையின் உறவினர்கள். அவர்கள் பூஜைக்கான கூடுதல் பொருட்களைக் கோவில் விவசாய நிலத்தில் இருந்து வழங்குகிறார்கள்.

6. அஜந்தா சுப்பிரமணியம் மற்றும் அவரது குழுவினர் : அவர் எனது உறவினர் மட்டுமல்ல சிறந்த ஆதரவாளர் என்றுதான் சொல்லலாம். அவர்களே காலைத் திருவிழாவிற்குப் பிறகு விநியோகிக்கப்படும் உணவைத் தயாரிக்கின்றனர்.

7. வாகையன் : கோவிலின் ஒவ்வொரு ஆண்டும் எட்டாம் நாள் திருவிழாவை மேம்படுத்துவதில் அவர் எனக்கு மிகப்பெரிய ஆதரவு வழங்கி வருகிறார்.

8. நாதன் ஐயா மற்றும் அவரது குடும்பத்தினர்: எனது சவால்களைப் புரிந்துகொண்டு ஒவ்வொரு ஆண்டும் எட்டாம் நாள் திருவிழா சிறப்பாக நடைபெற உதவுகிறார்கள்.

9. எனக்கு மகன் போன்ற துஷாந்த் சிவகுமாரன் இந்த புத்தகத்தை மீண்டும் எழுத எனக்கு உதவினார். சிவலோகப்பிள்ளை சேதுகாவலப்பிள்ளை எழுதிய மூலப் பதிப்பைப் பற்றிய இவரது ஆய்வும், நமது தமிழ்ப் பண்பாடு, சுழிபுரம் குடும்ப வேர்கள் பற்றிய ஆழமான புரிதலும் பெரிதும் உதவின. அவர் இல்லாமல், இது சாத்தியமில்லை. எனவே அவரை நான் பெரிதும் போற்றுகிறேன். எதிர்காலத்தில் எனது மகன்களின் உதவியுடன் எட்டாவது நாள் திருவிழாவை நடத்துவதற்கு வாழ்நாள் முழுவதும் ஆதரவாகவும் சாத்தியமான வாரிசாகவும் அவரைப் பார்க்கிறேன்.

   எட்டாம் நாள் திருவிழாவை சிறப்பாக நடத்துவதில் இவர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். மேலும் அவர்கள் அளித்து வரும் ஆதரவிற்கு எனது நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

10. இந்த நூலைத் தமிழிலிருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்த சுகாசினி ராஜேந்திரன் அவர்கட்கும், நூலின் இறுதி வடிவமைப்பைச் செய்து உதவிய ஹரினா வித்தியநாதா அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

11. இந்த நூலை அச்சுருவாக்கும் பணியில் எமக்கும் அச்சகத்தாருக்கும் நடுநிலை நின்று அதனைச் செம்மைப்படுத்தி உதவிய எனது பால்யகால நண்பனும் எனது பள்ளித் தோழனுமாகிய சர்வானந்தா அவர்கள் நன்றிக்குரியவர்.

12. இந்த நூலை வெளியிடுவதில் முழுமையான பங்களிப்புச் செய்து ஊக்குவித்து ஆதரவு நல்கிய பறாளை முருகன் கோயில் நிர்வாக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.



திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025

29–05–2025

சுழிபுரம் அருள்மிகு பறாளை முருகன் திருக்கோவில் குழுவிற்கு

கோயில் வரலாற்றின் சிங்கள மொழிபெயர்ப்புத் தொடர்பான உறுதிப்படுத்தல்

மிகவும் மதிப்பிற்குரிய குழு உறுப்பினர்களே,

சுஹாசினி ராஜேந்திரன்
எனது தேசிய அடையாள அட்டை எண்: 857851013V
முகவரி: எண். 443, கொடெல்லவத்த, மாலபே.

சுழிபுரம் பறாளை முருகன் திருக்கோவிலின் வரலாற்றுச் சுருக்கத்தின் சிங்கள மொழிபெயர்ப்பை, அதன் தமிழ் மூலப் பதிப்பின் அடிப்படையில் முழுமையாக நிறைவு செய்துள்ளேன் என்பதை இத்தால் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ் மொழிபெயர்ப்புப் பணியைத் திரு.லோகநாதன் அவர்கள் முன்வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் மேற்கொண்டேன். இவ்வாய்ப்பை எனக்குத் தந்தது, இப்புனிதமான பணியில் பங்குபெறச் செய்தமை எனக்கு கிடைத்த பாக்கியமாக உணர்கிறேன்.

இந்த உயரிய நம்பிக்கைக்காக திரு. லோகநாதன் அவர்களுக்கும், பறாறை முருகன் கோவிலின் நிர்வாகத்தினருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த குழுவின் எல்லா எதிர்கால திட்டங்களுக்கும் முருகப்பெருமான் அருள்வாராக. அனைவருக்கும் ஆனந்தம், ஆன்மீக செழிப்பு மற்றும் அபிவிருத்தி நிலைத்திருக்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




திருத்தப்பட்ட வெளியீட்டு ஆசிரியரான லோகன் நாதனின் (மின்னஞ்சல்: logannathan.com.au) வெளிப்படையான
அனுமதியின்றி இந்த உள்ளடக்கத்தை அங்கீகரிக்கப்படாத முறையில் மறுபதிப்பு செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. © 2025





Scan the QR Code
to dawnload the
digital edition

**Published by Logan Nathan**

Unauthorised republication of this content is prohibited without the
explicit permission of the revised
publication author, Logan Nathan (email: logannathan.com.au). © 2025

**Print@Evergreen, Jaffna. +94 21 221 9893**